## 100 நாள் வேலைத்திட்டத்தை அழிக்கத் துடிக்கும் நாசகார ஒன்றிய பா.ஜ.க. அரசு –

# ஒத்து ஊதும் அ.தி.மு.க.வைக் கண்டித்து கூட்டணிக் கட்சியினர் கடலெனத் திரண்ட காட்சி!



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க மதுரை மாநகர் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பாக அண்ணல் காந்தியடிகளின் பெயரை நீக்கி நூறுநாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் வகையில் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும் அதற்கு ஒத்துஊதும் அ.தி.மு.க.வைக் கண்டித்தும் முனிச்சாலையில் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் சண்முகம் கழக மாநில உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பொன். முத்துராமலிங்கம், தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் சிறப்புரை யாற்றினார். இதில் தி.மு.க. கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.




நெல்லை மேற்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் கல்யாண தியேட்டர் அருகில் அண்ணல் காந்தியடிகளின் பெயரை நீக்கி 100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தைக் கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க.அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட துணைச் செயலாளர் மைக்கேல்,அம்பை ஒன்றியச் செயலாளர் பரணி சேகர், அம்பை நகரச் செயலாளர் பிரபாகரன், வி.கே.புரம். நகரச் செயலாளர் கணேசன், வழக்கறிஞரணி அமைப்பாளர் செல்வ சூடாமணி, துணை அமைப்பாளர் மாடசாமி உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பலர் உள்ளனர். கூட்ட நிறைவில் மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் கண்டன உரையாற்றி தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என்று கூறி நிறைவு செய்தார்.



100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும் சட்டத்தைக் கொண்டுவந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில் திண்டுக்கல் கிழக்கு மாவட்டம் திண்டுக்கல் வடக்கு ஒன்றியம் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் பெ.செந்தில்குமார் கண்டன உரையாற்றினார். உடன் ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன், மாவட்ட துணைச் செயலாளர் பிலால் உசேன், மாநகரச் செயலாளர் ராஜப்பா உள்பட மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கிராமப்புற பெண்கள் திரளாக கலந்து கொண்டனர்.



அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கி 100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க அரசையும் ஒத்து ஊதும் அதிமுகவையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் கிழக்கு மேற்கு மத்திய ஒன்றியம் பூண்டி மேற்கு ஆகிய ஒன்றியங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார் உடன் மாவட்ட அவைத்தலைவர் கே.திராவிடபக்தன், ஒன்றிய செயலாளர்கள் மோ.ரமேஷ், க.அரிகிருஷ்ணன், டி.மோதிலால், பிரகாஷ்ஞானஒலி, மாநில மாவட்ட நிர்வாகிகள் ஆர்.டி.தி.ஆதிசேசன், மாஸ்டர் சேகர், மாஸ்டர் குருதாஸ், உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, ப.சிட்டிபாபு, உள்பட திமுக நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்




அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கி 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தைக் கொண்டுவந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும், ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து இராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. தலைமையில் கண்டன முழக்கத்தை கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் எழுப்பினர்.




காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் 100 நாள் வேலை வாய்ப்பு ஒழிப்பு. ஒத்து.ஊதும் அ.தி.மு.க மற்றும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம் எல் ஏ கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் பி சேகர்.பி. எம் பாபு தேவேந்திரன் பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி இல்லாமல்லி ஸ்ரீதர்..டி சஞ்சய் காந்தி.உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின். மாவட்ட. ஒன்றிய. பேரூர். நிர்வாகிகள் உடன் இருந்தனர்.




தருமபுரி கிழக்கு மாவட்டம் அரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு 100 நாள் வேலை திட்டத்தில் அண்ணல் காந்தியடிகளின் பெயரை நீக்கி அத்திட்டத்தை முற்றிலுமாக ஒழிக்க நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசையும்,அதற்கு ஒத்து ஊதும் அதிமுக வையும் கண்டித்து தருமபுரி திமுக கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி. தலைமையில் நகர செயலாளர் முல்லைரவி,காங்கிரஸ் வைரவன்,வி.சி.க சாக்கன் ஷர்மா,உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் மாவட்ட செயலாளர்கள் மற்றும் திமுக ஒன்றிய செயலாளர்கள், தொண்டர்கள் உள்ளிட்ட 500 க்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கி 100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க அரசையும் ஒத்து ஊதும் அதிமுகவையும் கண்டித்து அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆலோசனை படி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் பூவிருந்தவல்லி ஒன்றியம் வட்டார வளர்ச்சி அலுவலக எதிரில் ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் நடைபெற்றது இதில் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார் உடன் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் , பொதுக்குழு உறுப்பினர் காஞ்சனா சுதாகர் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.